# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

Calendar Case No: STC.9/2025

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.4 (LW3)

Name : **செல்வமணியன்**

Father's/Husband Name:

Village :

Taluk : **வேப்பந்தட்டை**

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.01.2026

**( எதிரிகள் A1–பாலதண்டாயுதம், A2–ஜெயகாந்தி , A3–செல்லமுத்து, A4–ராஜமாணிக்கம் , A5–சுதாகர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது வேப்பந்தட்டை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து கடந்த 30.11.2024 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளேன். அ.சா.1–அழகேஸ்வரி அப்போதைய கிராம நிர்வாக அலுவலரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவ சமயத்தில் கை. களத்தூரில் ஆக்கிரமிப்பை அகற்ற சென்றபோது அவர்கள் தடுத்தார்கள் அந்த வகையில் தெரியும். 18.01.2024 கை.களத்தூர் கிழக்கு கிராம நிர்வாக சர்வே எண்.34/9 புதிய பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் வீடு மற்றும் கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்ததால் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் எதிரிகளுக்கு ஆக்கிரமிப்பை எடுக்கும்படி அறிவிப்பாணை கொடுக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பாணையில் எதிரிகள் பெறாததால் அவர்கள் கடையில் ஒட்டி அறிவிப்பாணை சார்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அவர்களே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ளாததால் 18.01.2024 அன்று காலை 10.00 மணியளவில் கிராம உதவியாளர்கள் சிவக்குமார், ராஜா, வட்டாட்சியர் மயக்கிருஷ்ணன், விஏஓ அழகேஸ்வரி, வருவாய் ஆய்வாளர் ராமலிங்கம் மற்றும் பக்கத்து கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் மேற்படி ஆக்கிரமிப்பை

அகற்றுவதற்காக காலை 10.00 மணியளவில் கை.களத்தூர் பேருந்து நிலையத்திற்கு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சென்ற போது பாலதண்டாயுதம், கோபலன், ஜெயகாந்தி, செல்லமுத்து, ராஜமாணிக்கம், சுதாகர் ஆகியோர்கள் ஆக்கிரமிப்பை அகற்றும் போது சட்டவிரோதமாக ஒன்று கூடி எங்களை தடுத்து அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள். அதனால் நாங்கள் செய்த ஆக்கிரமிப்பை அகற்றும் பணி 3 மணி நேரத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் துறையிடம் புகார் அளித்ததன் பேரில் அவர்கள் எதிரிகளை கைது செய்து அப்புறப்படுத்திய பிறகு தான் ஆக்கிரமிப்பு பணி செய்யப்பட்டது. இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் அழகேஸ்வரி புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(i) கிராம நிர்வாக அலுவலர் யார் பேரில் என்ன புகார் அளித்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவசமயத்தில் கிராம ஊராட்சிக்கான வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். கை. களத்தூர் பேருந்து நிலையம் அருகே கடைகள் மற்றும் வீடுகள் எவ்வளவு நாளாக அங்கு இருக்கிறது என்றால் தோராயமாக 7, 8 வருடங்களாக இருக்கிறது. பொதுவாக பல வருட ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு பிரிவு 6ன் படி முன் அறிவிப்பு அளிப்பதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்றால் மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டார ஆட்சியருக்கு அதிகாரம் இருக்கிறது. எனக்கு இல்லை. என்னுடைய உயர் அதிகாரிகள் எழுத்து மூலமாக எந்த தேதியில் ஆக்கிரமிப்பை அகற்ற அறிவிப்பு அளித்துள்ளார்களா என்றால் அளித்துள்ளார்கள். சம்பந்த பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற முன்கூட்டியே காவல் துறையினரிடம் அனுமதி பெற்றீர்களா என்றால் வட்டாட்சியர் கொடுத்திருப்பார் அது பற்றி எனக்கு தெரியாது. பிரிவு 6ன் கீழ் அறிவிப்பு அனுப்பி விட்டு எனது உயர் அதிகாரிகள் கால அவகாசம் கொடுக்காமல் கட்டித்தை இடித்ததால் எதிரிகள் அனைவரும் தனிதனியாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்து அதில் Stay உத்தரவு பெற்றுள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த இடம் தொடர்பாக எதிரிகள் தாக்கல் செய்த நீதிபேராணை மனுவில் அரசுக்கு ஆதராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நான் அரசு அதிகாரி என்பதால் எதிரிகள் மீது கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த பொய்யான புகாரின் மீது அரசுக்கு ஆதராவாக பொய்யான புகார் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கை. களத்தூர் பேருந்து

நிலையத்தில் எதிரிகளை தவிர அதிக கும்பல் இருந்ததா என்றால் இருந்தது. குறிப்பிட்டு எதிரிகள் மீது புகார் அளிப்பதற்கு முகாந்திரம் என்றவென்றால் அவர்களுடைய கடை மற்றும் வீடு அங்கு இருந்தது. நான் அரசு பணியை ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டு தான் அங்கிருந்து வந்தேன் என்றால் சரி. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதமாக சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

Calendar Case No: STC.9/2025

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.5 (LW5)

Name : ராஜா

Father's/Husband Name:

Village :

Taluk : வேப்பந்தட்டை

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.01.2026

**( எதிரிகள் A1–பாலதண்டாயுதம், A2–ஜெயகாந்தி , A3–செல்லமுத்து, A4–ராஜமாணிக்கம் , A5–சுதாகர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது கை. களத்தூர் கிழக்கு கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1–அழகேஸ்வரி அப்போதைய கிராம நிர்வாக அலுவலரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் கை.களத்தூரை சேர்ந்தவர்கள் ஆவர். சம்பவ சமயத்தில் கை. களத்தூரில் ஆக்கிரமிப்பை அகற்ற சென்றபோது அவர்கள் தடுத்தார்கள் அந்த வகையில் தெரியும். 18.01.2024 கை.களத்தூர் கிழக்கு கிராம நிர்வாக சர்வே எண்.34/9 புதிய பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் வீடு மற்றும் கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்ததால் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் எதிரிகளுக்கு ஆக்கிரமிப்பை எடுக்கும்படி அறிவிப்பாணை கொடுக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பாணையில் எதிரிகள் பெறாததால் அவர்கள் கடையில் ஒட்டி அறிவிப்பாணை சார்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அவர்களே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ளாததால் 18.01.2024 அன்று காலை 10.00 மணியளவில் கிராம உதவியாளர் சிவக்குமார், வட்டாட்சியர் மயக்கிருஷ்ணன், விஏஓ அழகேஸ்வரி, வருவாய் ஆய்வாளர் ராமலிங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருடன் நானும் அலுவல் பணியாக மேற்படி ஆக்கிரமிப்பை

அகற்றுவதற்காக காலை 10.00 மணியளவில் கை.களத்தூர் பேருந்து நிலையத்திற்கு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சென்ற போது பாலதண்டாயுதம், கோபலன், ஜெயகாந்தி, செல்லமுத்து, ராஜமாணிக்கம், சுதாகர் ஆகியோர்கள் ஆக்கிரமிப்பை அகற்றும் போது சட்டவிரோதமாக ஒன்று கூடி எங்களை தடுத்து அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள். அதனால் நாங்கள் செய்த ஆக்கிரமிப்பை அகற்றும் பணி 2 மணி நேரத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் துறையிடம் புகார் அளித்ததன் பேரில் அவர்கள் எதிரிகளை கைது செய்து அப்புறப்படுத்திய பிறகு தான் ஆக்கிரமிப்பு பணி செய்யப்பட்டது. இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் அழகேஸ்வரி புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) சம்பவம் குறித்து கிராம நிர்வாக அலுவலர் என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் மேற்படி இடத்தில் சுமார் எத்தனை வருடமாக கடை மற்றும் வீடு கட்டி இருந்து வருகிறார்கள் என்றால் 20 வருடங்கள் இருக்கும். சம்பவத்தன்று முதலில் இடத்திற்கு சென்றபோது எதிரிகள் நீதிமன்ற உத்தரவை பற்றி சொன்னது குறித்து தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலரிம் சொல்லியிருப்பார்கள். நீங்கள் சொல்வது போல் எதிரிகள் உங்களை அரசு பணியை செய்ய விடாமல் மறிக்கவில்லை என்றால் சரியல்ல.

(ii) நீங்கள் சொல்வது போல எதிரிகள் உங்களை அவதூராக பேசி வழிமறிக்கவும் இல்லை நீங்கள் அரசாங்க அதிகாரிக்கு உதவியாளர் என்பதால் உங்கள் அதிகாரியின் அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய் புகார் அளித்து அதன்பேரில் இவ்வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நீங்கள் இடிக்க முற்பட்ட சொத்திற்கு ஆதரவாக நீதிபேராணை வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்கள் அதை உங்களால் ஏற்றுக்கொள்ளவும் பொருத்துகொள்ளவும் முடியாமல் உங்களது அதிகாரியால் அதிகாரம் உள்ளதுபோல பாவித்து இந்த வழக்கை தாக்கல் செய்ததால் அதிகாரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது அதிகாரிகள் அன்றைய தினத்தில் அவர்களது கடமையை செய்து முடித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.